நாள் **-25.03.2024. S.C.No. 371/2019 PW 1** திருமதி. அருள்செல்வி **(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்.

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

நான் தற்போது ஆசிரியர் பணியில் உள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் நான் கொடுத்த புகாரை நான் அங்கிருந்த என் உறவினர் ஒருவர் எழுதியதாக சொல்லியுள்ளேன். அந்த உறவினர் யார் அவர் பெயர் , முகவரி என்ன என்று நான் போலீஸ் விசாரணையிலோ அல்லது என் முதல் விசாரணையிலோ குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி நான் கொடுத்த புகாரில் உறவினர் வீட்டிற்குச் சென்றுவந்தோம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றும், எந்த உறவினர் வீட்டிற்கு எப்போது சென்று வந்தேன் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை. அ.சா.2 முதல் அ.சா.4 வரையானவர்கள் எனது உறவினர்கள் என்றால், அவர்கள் அனைவரும் ஒரே ஊர்க்காரர்கள்தான். அவர்களின் அ.சா.4 சிவா என்பவர் மட்டும் எனது தம்பியாவார், அவர் எனது உடன்பிறந்தவர் அல்ல, சித்தப்பா மகனாவார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் நானும், என் கணவரும் எந்த வாகனத்தில் சென்றோம், ரோட்டின் எந்த திசையிலிருந்து வந்து கொண்டிருந்தோம் என்ற விபரத்தினை நான் போலீஸ் விசாரணை, புகார் மற்றும் முதல் விசாரணையில் ....

சொல்லவில்லை என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் வந்ததாக சொல்லப்படும் விபரத்திற்கு அது 108 அரசு ஆம்புலன்ஸா அல்லது தனியார் ஆம்புலன்ஸா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்குத் தெரியாது, நான் அதை வரவழைக்கவில்லை. மேற்படி ஆம்புலன்சினை யார் வரவழைத்தார்கள் என்ற விபரமும் எனக்குத் தெரியாதென்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து மருத்துவமனைக்கு எப்படி நான் போனேன் என்ற விபரத்தினை நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, ஆம்புலன்சில் சென்றேன். நான் மேற்படி ஆம்புலன்சில் சென்றவிபரத்தினை நான் சொல்லவில்லை என்றும், நான் இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனுக்கு நான் இரண்டாவது மனைவியாவேன். இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனின் முதல் மனைவிக்கு குழந்தைகள் உள்ளனர், எனக்கும் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். இறந்துபோன அறிவழகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தார், அவர் சட்டப்படியான உரிமம் பெற்று மேற்படியான தொழிலை செய்து வரவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவத்தின்போது எனக்கு என் கணவரை காப்பாற்றும்போதோ, கீழே விழுந்தவரை நான் தூக்கும்போதோ அல்லது ஆம்புலன்சில் செல்லும்போதோ எனக்கு எவ்விடத்திலும், என் உடையிலும் இரத்தக்கறை இருந்ததா, இல்லையா என்றால் இரத்தக்கறை இல்லை, அந்த அவ்விபரத்தினை நான் என் புகாரிலோ அல்லது முதல் ...

விசாரணையிலோ சொல்லவில்லை என்றால்சரிதான். எதிரி சப்தம்போட்டுக் கொண்டு ஓடிவந்தாரா அல்லது இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகன் சப்தம்போட்டு தப்பித்து ஓடினாரா என்ற விபரத்தினை நான் என் புகாரில் துல்லியமாக சொல்லியுள்ளேனா என்றால் எதிரி சப்தம் போட்டுக் கொண்டு ஓடி வந்தார். சம்பவஇடமானது மெயின்ரோடு என்றால் சரிதான், சம்பவத்திற்கு முன்போ அல்லது பின்போ எந்த சாட்சியாவது எனக்கு உதவிக்கு வந்தார்களா என்றால் மாயன் மகன் அறிவழகன், ஜெயச்சந்திரன் மகன் சிவா மற்றும் சந்திரன் மகன் வெண்மணி சந்திரன் ஆகியோர் வந்தார்கள். மேற்படி வந்த நபர்களையும், என்னையும் எதிரி மிரட்டியதால் எங்களுக்கு பயம் இருந்தது என்ற விபரத்தினை நான் புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகாரை நான் எழுதவில்லை, நான் சொன்னபடி புகார் எழுதப்பட்டிருந்தது, அதை நான் படித்துப்பார்த்து அதில் நான் சொல்லச்சொல்ல எழுதிய விபரம் சரியா இருந்ததென்று நான் ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்து செய்திருந்தேனா என்றால் நான் புகாரில் கையெழுத்து போட்டேன். மேற்படி புகாரில் நான் ஒரு கையெழுத்து மட்டும் போட்டேன். சம்பவத்தின்போது எதிரி எந்த திசையிலிருந்து ஓடி வந்தார் மற்றும் எத்தனை முறை இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனை வெட்டினார் என்றால் எதிரி மேற்கிலிருந்து வந்தார், இரண்டு முறை வெட்டினார். எதிரி இறந்துபோன அறிவழகனின் முன்கழுத்து பகுதியில் வெட்டினார். இறந்துபோன ....

அறிவழகனுக்கு முன் கழுத்தில் ஆழமாக ஒரேயொரு காயம் மட்டும் இருந்தது. அதைத்தவிர அவருக்கு எந்த இடத்திலும் காயம் இல்லை என்றால் சரிதான். நான் என் புகார் மற்றும் போலீஸ் விசாரணையில் அவரை எந்த ஆயுததத்தால் வைத்து காயத்தினை ஏற்படுத்தினார் என்று சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். ஆயுதத்தின் வடிவம் என்னவென்று நான் சொல்லியுள்ளேனா என்றால் அரிவாள் என்று மட்டும் சொல்லியுள்ளேன். நான் போலீஸ் விசாரணையில் எதிரி எந்த பக்கம் ஓடினார், எதைக் கொண்டு ஓடினார் என்ற விபரத்தினை சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்தன்று நான் போய்வந்ததாக சொல்லும் உறவினர்கள் மருத்துவமனை மற்றும் காவல்நிலையத்திற்கு வந்தார்களா , வழக்கு சம்பவம் பற்றி அவர்களிடம் சொன்னேனா என்றால் அவர்கள் வரவில்லை, நான் சொல்லவில்லை. சம்பவத்தன்று நானும், இறந்துபோன அறிவழகனும் இருசக்கர வாகனத்தில் சென்றோம் என்று சொல்லவில்லை. சம்பவத்தன்று இரவு 8.00 மணி வரை அரசு மருத்துவமனையில் இருந்தோம். காவல்நிலையத்திற்கு நாங்கள் இரவு 08.00 மணியிலிருந்து 08.30 மணிக்குள் சென்றோம். காவல்நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தோம் என்றால் இரவு 11.30 மணிக்குகொடுத்தோம். இடைப்பட்ட காலத்தில் போலீசார் என்ன நடந்தது என்று விசாரித்தார்களா என்றால் எனக்கு மயக்கமாக இருந்தது, தெளிவாக என்னால் எதையும் சொல்லமுடியவில்லை,

நேரம் எடுத்து நான் மயக்க நிலையில் இருந்து தெளிவான பின்பு புகாரளித்தேன். சம்பவத்தன்று என் அப்பா அரசுமருத்துவமனைக்கு மாலை 06.30 மணிக்கு வந்தார். நானும், என் அப்பாவும் காவல்நிலையத்திற்கு சென்றபோது போலீசார் என் அப்பாவை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அன்றைய தினம் என்னிடமோ அல்லது என் அப்பாவிடமோ போலீசார் வாக்குமூலம் விசாரித்து பதிவு செய்தார்களா என்றால் அன்றையதினம் பதிவு செய்யவில்லை, மறுநாள் பதிவு செய்தார்கள். சம்பவத்தின் மறுநாள் எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் காலை 11.00 மணிக்கு பதிவு செய்தார்கள். மேற்படி வாக்குமூலத்தினை ஆய்வாளர் பதிவு செய்தார். இவ்வழக்கு சம்பந்தமாக வேறு யாரையும் அன்றே விசாரித்தார்களா என்றால், அ.சா. 2 முதல் அ.சா.4 வரை விசாரித்தார்கள். நான் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், அ.சா. 2 முதல் அ.சா. 4 வரை உள்ள சாட்சிகள் சொல்லியுள்ள சம்பவ நேரமும், நான் சொல்லியுள்ள சம்பவ நேரமும் வேறுபடுவதால், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன அறிவழகன் பைனான்ஸ் தொழில் செய்து வந்தால் அவருக்கு எதிரிகள் இருக்கலாம் என்றும், இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை போலீசார் சொல்லிக் கொடுத்ததன்பேரில் சொல்லியுள்ளேன் என்றும், நான் ..

சம்பவத்தினை நேரில் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எனது கணவரை காப்பாற்ற முயற்சி செய்ததாக புகாரில் சொல்லவில்லை என்றும், எனவே நான் சம்பவ இடத்தில் இல்லையென்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனின் முதல் மனைவி மூலமும் அவருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் எதிரி மீது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்தின்போது எனக்கும், இறந்துபோன அறிவழகனுக்கும் பிரச்சினை ஏற்பட்டு நான் சென்னையில் என் பெற்றோருடன் வாழ்ந்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் கணவரை ஆம்புலன்சில் யாரோ கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்துவிட்டு, போலீசார் எனக்கும், என் அப்பாவிற்கும் தகவல் சொல்லி அதன்பின்பு நாங்கள் மருத்துவமனை மற்றும் காவல்நிலையத்திற்கு சென்று போலீசார் சொன்னபடி புகார் எழுதப்பட்டு அதில் நான் கையொப்பமிட்டு, இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - அருள்செல்வி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No.371/2019 PW 2** திரு.வெண்மணி சந்திரன்.

நாள் **-25.03.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**)**

எதிரி ஆஜர்.

குறுக்குவிசாரணை **(**எதிரி தரப்பில்**)**

இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகன் மற்றும் அவர் மனைவி, அவரின் தகப்பனார் மற்றும் அ.சா.4 சிவா ஆகியோர் எனக்கு உறவினர்களா என்றால் ஒரே ஊர்க்காரர்கள் ஆவார்கள். எனக்கும், அ.சா. 5 லோகராஜாவுக்கும் பழக்கமா என்றால் அவர் யார் என்று எனக்குத் தெரியாது. அ.சா.3 அறிவழகன் எனது நண்பர் என்றால் சரிதான். அவரின் ஊர் செல்லம்பட்டி என்றால் சரிதான். 15.09.2018 அன்று நானும், அ.சா 3 மற்றும் அ.சா. 4 ஆகியோர் என்ன பேசிக் கொண்டிருந்தோம், என்ன விபரமாக பேசிக்கொண்டிருந்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நாங்கள் எத்தனை மணிக்கு சந்தித்து பேச ஆரம்பித்தோம் என்றால் சம்பவம் நடப்பதற்கு சிறிது நேரத்திற்கு முன்பு பேச ஆரம்பித்தோம். நான் போலீஸ் விசாரணையில் மேற்படி விபரத்தினை சொல்லவில்லை என்றும், தற்போது நீதிமன்றத்தில் புதியதாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் என்னுடன் பேசிக்கொண்டிருந்த அ.சா.3 மற்றும் அ.சா. 4 ஆகியோரின் தகப்பனார் ....

பெயர்கள் குறித்த விபரங்கள் எனக்கு துல்லியமாகத் தெரியுமா என்றால் சிவாவின் தகப்பனார் ஜெயச்சந்திரன், அறிவழகனின் தகப்பனார் பெயர் தெரியாது. நான் தொழில் செய்யும் பால்பண்ணை மாதரையில் உள்ளது. அ.சா. 1 அருள் செல்வி கத்தி அலறி உதவி கேட்டபடியால் நான் போனேன் என்றால் சரிதான். எதிரி என்னை கடந்து சென்று இறந்துபோன அறிவழகனை தள்ளிவிட்டு அரிவாளால் முன்கழுத்தில் மாறி மாறி வெட்டினார், நான் அதைப் பார்த்தேன். கழுத்தில்மட்டும்தான் அவரை வெட்டினார். நான் அந்த சம்பவத்தைப் பார்த்தபின்பு, அறிவழகனை மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பதற்கோ, ஆம்புலன்சை வரவைப்பதற்கோ நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் செல்லவில்லை, பின்னால் பைக்கில் சென்றேன். என்னுடன் மருத்துவமனைக்கு அ.சா.3, அ.சா. 4 மற்றும் அ.சா. 5 ஆகியோர் வந்தனரா என்றால் , அவர்கள் மருத்துவமனைக்கு என்னுடன் வந்தார்களா என்றால் நான் பார்க்கவில்லை, நான் பைக்கில் முன்பு சென்றுவிட்டேன். எங்கள் கிராமத்திற்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தூரம் வரை இருக்கும். அ.சா. 3 அறிவழகனின் ஊரான செல்லம்பட்டிக்கும், சம்பவ இடத்திற்கும் இடையே சுமார் 8 கி.மீ தூரம் இருக்கும். நான் M.A. sociology படித்துள்ளேன். எனக்கு குடிப்பழக்கம் மற்றும் சிகரெட் பழக்கம் இல்லை. அ.சா. 3 மற்றும் அ.சா. 4 ஆகியோருக்கு மேற்படி பழக்கங்கள் உள்ளதா

என்றால் எனக்குத் தெரியாது. பொதுவாக பால் பண்ணை நடவடிக்கைகள் மதியம் 02.00 மணிக்கு மேல் ஆரம்பித்து மாலை 06.00 மணி வரை கறவைக்காரர்கள் பால் கறப்பார்கள். நான் சொந்தமாக பால்பண்ணை நடத்தி வருகிறேன். நான் பால் பண்ணை நடத்தி வருவதால் நான் சொன்ன நேரத்தில் பால் பண்ணையில் இருந்திருப்பேன் என்றும், நான் என் நண்பர்களை சந்தித்து பேசிய நேரம் குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 3 மற்றும் அ.சா. 4 ஆகியோரின் தனிப்பட்ட பழக்க, வழக்கங்கள் எனக்குத் தெரியாததால் அவர்கள் என் நண்பர்களே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா. 4 ன் தகப்பனார் பெயர் எனக்குத் தெரியாததால் அவர் எனக்கு நண்பரே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்னது போல் நானும், அ.சா. 3 மற்றும் அ.சா. 4 ஆகியோர் சம்பவ இடத்திலேயே இல்லை, சம்பவத்தினை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. அ.சா. 1 மற்றும் அ.சா. 6-ன் ஊரைச் சேர்ந்தவன் என்பதால் போலீசார் சொல்லிக் கொடுத்ததன்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா. 1 மற்றும் அ.சா. 6 ஆகியோர் என் பால் பண்ணை தொழிலில் தொடர்பு உடையவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் சம்பந்தமாக போலீசார் என்னை சம்பவம் நடந்த மறுநாள் அரசு மருத்துவமனையில் வைத்து காலை சுமார் 11.00 மணியளவில் விசாரித்தார்கள். நான் சொன்ன விபரங்களை

கணினியில் தட்டச்சு செய்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை ஆய்வாளர் விசாரிக்கவே இல்லை என்றும், என் பெயர் மற்றும் முகவரியை வாங்கிக் கொண்டு என்னை அனுப்பிவிட்டார்கள் என்றும், என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - வெண்மணி சந்திரன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No.371 /2019** **PW 3** திரு**.** அறிவழகன்**.**

நாள் **-25.03.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்**.**

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

நான் தற்போதும் அரசு ஆசிரியராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரிதான். அ.சா. 2 மற்றும் அ.சா. 4 ஆகியோர் கடந்த 4 வருடங்களாக எனக்கு நண்பர்கள் ஆவர். எனக்கு எந்தவிதமான கெட்ட பழக்கமும் கிடையாது, எனது நண்பர்களுக்கும் கிடையாது. அ.சா. 2 வெண்மணி சந்திரனின் அப்பா பெயர் சந்திரன், அ.சா. 4 சிவாவின் அப்பா பெயர் எனக்கு ஞாபகமில்லை. தற்செயலாக சம்பவ இடத்தில் நாங்கள் சந்தித்துக் கொண்டோம். தற்செயலாக சந்தித்தபோது முதலாவதாக யார் வந்தார் கடைசியாக யார் வந்தார் என ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நாங்கள் சம்பவ இடத்தில் என்ன பேசிக்கொண்டிருந்தோம், எவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருந்தோம் என்ற விபரத்தினை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனின் குடும்பம் பற்றிய விபரம் எனக்குத் தெரியாது. இறந்துபோன அறிவழகனின் மனைவியை நான் சம்பவத்தன்றுதான் பார்த்தேன். எதிரி இவ்வழக்கில் இறந்துபோன ...

அறிவழகனை நான் வழி மறைத்ததை பார்த்தேனா அல்லது வெட்டியதை பார்த்தேனா என்றால் வழிமறைத்ததையும் பார்த்தேன், வெட்டியதையும் பார்த்தேன். நான் எதிரியை பிடிக்க முயற்சித்தபோது அவர் அரிவாளை வைத்து எங்களை நோக்கி ஓங்கினார். மற்ற என் நண்பர்களும் சேர்ந்து தான் எதிரியைப் பிடிக்க போனோம். எதிரி எந்த பக்கம் ஓடினார், எந்த கலர் பேக்-ஐ வைத்திருந்தார் என்று நான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இறந்துபோன நபரை மருத்துவமனைக்கு எடுத்து செல்வதற்கு ஆம்புலன்ஸ் ஏற்பாடு செய்வதற்கோ, வேறு எந்த நடவடிக்கைக்கோ நான் கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். என் நண்பர்களான அ.சா. 2 மற்றும் அ.சா. 4 ஆகியோர் மேற்படி விசயத்தில் பங்கு கொண்டனரா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு அன்றைய தினம் சென்றேனா என்றால் இல்லை. என்னை போலீசார் சம்பவத்தின் மறுநாள் மருத்துவமனையில் வைத்து சுமார் காலை 10.00 மணி முதல் 11.00 மணிக்குள் விசாரித்தார்கள். அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள், காவல் நிலையத்தில் வைத்து விசாரிக்கவில்லை. என்னுடைய வாக்குமூலத்தினை அரசு மருத்துவமனையில் வைத்து கணினியில் தட்டச்சு செய்யவில்லை, கேட்டார்கள் சொன்னேன், எழுதிக் கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னை போலீசார் விசாரிக்கும்போது அ.சா. 2 மற்றும் அ .சா.

4-ஐயும் விசாரித்தார்கள். நான், அ.சா. 2 மற்றும் அ.சா.4 ஆகியோர்கள் நண்பர்களே இல்லை என்றும், அ.சா. 2 கேட்டுக் கொண்டதற்கிணங்க அறிவழகன் இறந்த இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவேயில்லை என்றும், எதிரியை நான் பிடிக்க முயற்சி செய்யவும் இல்லை என்றும், அவ்வாறு நான் எதிரியை பிடிக்க முயற்சித்திருந்தால் , இறந்தவரை காப்பாற்ற முயற்சி செய்திருப்பேன் என்றும், நான் சம்பவ இடத்தில் இல்லாததால் அவ்வாறு செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இறந்துபோன அறிவழகனை ஆம்புலன்சில் ஏற்றுவதற்கு நான் எவ்வித உதவியும் செய்யவில்லை.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - அறிவழகன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No.371 /2019 PW 4** திரு**.** சிவா**.**

நாள் **-25.03.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்**.**

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

நான், அ.சா. 1 மற்றும் அ.சா. 6 ஆகியோர்கள் ஒரே கிராமத்தினைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் என் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் எனது நண்பர்கள், அவர்களை எனக்கு 4 வருடங்களாத் தெரியும். எனக்கும், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோருக்கும் எந்தவித கெட்ட பழக்கங்களும் கிடையாது. அ.சா. 2 ன் தகப்பனார் பெயர் சந்திரன் மற்றும் அ.சா. 3 ன் தகப்பனார் பெயர் மாயன் ஆகும். சம்பவ இடத்திற்கு அருகில் நான், அ.சா. 2 மற்றும் அ.சா. 3 ஆகியோரில் யார் முதலில் வந்தார்கள் யார் கடைசியாக வந்தார்கள், என்ன விபரத்திற்காக சந்தித்துக் கொண்டோம் என்ற விபரத்தினை போலீசார் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனை நான் ஆம்புலன்சில் ஏற்றவோ அல்லது அவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கோ நான் எதுவும் முயற்சி செய்தேனா என்றாலும், என்னுடைய உடைகளில் இரத்தக்கறை படிந்திருந்ததா என்ற விபரத்தினையும் போலீஸ் விசாரணையில் நான் சொல்லியுள்ளேனா ...

என்றால் சொல்லவில்லை. எதிரி இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனை வெட்டும்போது நான் பார்த்தேன். நானோ அல்லது அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்களோ எதிரியை தடுக்க முற்பட்டோமா என்றால் அவர் எங்களை அரிவாளை கொண்டு ஓங்கி மிரட்டினார். நாங்கள் சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தோம் என்ற விபரத்தினை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவமானது மாலை சுமார் 04.30 மணிக்கு மேல்நடந்தது. சம்பவத்தின் மறுநாளான 16.09.2018 அன்று போலீசார் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரிக்கும்போது நான் மேற்படியான விபரங்களை சொன்னேன். நான் சொன்ன விபரங்களை போலீசார் கணினியில் தட்டச்சு செய்தார்களா அல்லது குறித்துக் கொண்டார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடன் சேர்த்து போலீசார் என் நண்பர்களை விசாரித்தார்களா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அ.சா. 3 அறிவழகன் என் நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததைப்போன்று போலீசார் சொல்லிக் கொடுத்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனை காப்பாற்ற முயற்சி செய்யாத நான் என்னை எதிரி தாக்க வந்ததாகவும், வெட்ட வந்ததாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் இவ்வழக்கில் இறந்துபோனவரை காப்பாற்ற

முயற்சி செய்திருப்பேன் என்றும், அவ்வாறு இல்லாததால் மனசாட்சிக்கு விரோதமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயிருக்கு போராடும் நபரை காப்பாற்ற வேண்டுமென்ற கடமையிலிருந்து நான் தவறிவிட்டேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம் - சிவா.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No. 371 /2019** **PW 5** திரு. லோகராஜா.

நாள் **-25.03.2024.**
(சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

எதிரி ஆஜர்.

குறுக்குவிசாரணை (எதிரி தரப்பில்)

இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகன் என் மாமா மகன் ஆவார், அவர் என்னுடைய அத்தை மகன். எனது சொந்த ஊர் செம்பட்டி, நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். அ.சா. 1 அருள் செல்வியின் குடும்பத்தாரை எனக்கு 20 ஆண்டுகளாகத் தெரியும். அ.சா. 1 அருள் செல்வி எனது உறவினர் என்றால் சரிதான். என்னால் சம்பவ தேதி, நாள், வருடம் ஆகியவற்றினை துல்லியமாகச் சொல்லமுடியுமா என்றால் முடியாது, ஆனால் அன்றைய தினம் விநாயகர் சதூர்த்தி முடிந்து விநாயகர் சிலையை கரைக்கபோனார்கள், அதுவும் சுமார் 5 , 6 வருடங்களுக்கு மேல் இருக்கும். நான் எனது முதல் விசாரணையில் கூட்டம் அந்தபக்கமாக போனதாக சொன்னேன் ஆனால் எந்த திசை என்று துல்லியமாகச் சொல்லவில்லை என்றால், சாட்சி தற்போது அது மேற்கு பக்கம் என்று சொல்லுகிறார். எனக்கு இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்பே கடந்த 2004 ஆம் ஆண்டு முதலே சாலை விபத்தில் எனது இடது கால் ஊனமாகிவிட்டபடியால் என்னால் நின்று வியாபாரம் பார்க்கமுடியாது, உட்கார்ந்துதான் வியாபாரம் பார்க்க முடியும். நான்

சம்பவத்தன்று இறந்துபோனவரை எடுத்துச் சென்ற ஆம்புலன்சின் பதிவு எண் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி ஆம்புலன்ஸ் வந்த நேரத்தினை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனும், அ.சா. 1 அருள்செல்வியும் எந்த பக்கமிருந்து எந்த பக்கம் வந்தார்கள் என்பதை நான் கவனிக்கவில்லை. வெட்டிவிட்டார்கள் என்று சப்தம் கேட்டவுடன் நான் எழுந்து சென்று பார்த்தேன். அ.சா. 1 அருள்செல்விதான் சப்தம்போட்டார். அங்கு கூட்டம் கூடிவிட்டது. அந்த சம்பவம் அன்று மாலை சுமார் 05.45 மணிமுதல் 06.00 மணி போல் ஆம்புலன்ஸ் வந்தது. சம்பவம் நடந்து 10 நிமிடங்களுக்குள் ஆம்புலன்ஸ் வந்தது. மேற்படி விபரத்தினை மறுநாள் நான் வைத்திருக்கும் கடைக்கு போலீசார் வந்தபோது தெரிவித்தேன். எதிரி எனது கடையில் நின்று இறந்துபோன நபருக்கு போன் பேசியதாகவும், அப்போது போனில் சண்டை போட்டதாகவும் அது சம்பந்தமாக எனது கடையில் எதிரி அமர்ந்திருந்ததாகவும் நான் போலீஸ் விசாரணையில் எதுவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - லோகராஜா.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,

மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No.371/2019
Prosecution Witness PW 12
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.தாதப்பன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 25.03.2024.

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது தேனி மாவட்டம், குரங்கனி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2018 ஆம் ஆண்டு உசிலம்பட்டி நகர் காவல்நிலையத்தில் நான் தலைமைக் காவலராக பணியாற்றி வந்தபோது 16.09.2018 அன்று 00.15 மணிக்கு உசிலம்பட்டி நகர் காவல்நிலைய கு.எண்.654/2018 பிரிவுகள் 341, 294(b), 302, 506(ii) இ.த.ச. ன்.படி உசிலம்பட்டி நகர் காவல் சார்பு ஆய்வாளர் திரு. ராமகிருஷ்ணன் அவர்களால் பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் புகாரையும் சார்பு ஆய்வாளரின் உத்தரவு கடவுச்சீட்டினையும், விரைவுத் தபாலையும் கணம் உசிலம்பட்டி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1-ல் சுமார் 03.00 மணியளவில் ஒப்படைத்து மேலும், அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.....

குறுக்குவிசாரணை ( எதிரி தரப்பில்)

எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டினை நான் பணி முடித்து மீண்டும் அதை நிலைய எழுத்தரிடம் ஒப்படைத்தேன், அதை ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கடவுச்சீட்டு இருந்தால்தான் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை நான் செய்தேன் என்று உறுதி செய்யமுடியுமென்றால் சரிதான். என்னை போலீசார் எங்கு வைத்து, எப்போது விசாரித்தார்கள் என்ற விபரத்தினை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், தற்போது சாட்சி 16.09.2018 அன்று காவல்நிலையத்தில் வைத்து தன்னை விசாரித்ததாக கூறுகிறார்.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - தாதப்பன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 371/2019
Prosecution Witness PW 13
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. ரமேஷ் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - 25.03.2024.

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது உத்தப்பநாயக்கனூர் காவல்நிலையத்தில் முதல் நிலைக் காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் உசிலம்பட்டி நகர் காவல்நிலையத்தில் பணியாற்றியபோது கடந்த 16.09.2018 அன்று உசிலம்பட்டி நகர் காவல் நிலையக் கு.எண். 654/2018, பிரிவுகள் 341, 294(b), 302, 506(ii) இதச- ன் வழக்கில் இறந்துபோன அறிவழகன் , வயது 49/2018 என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய உசிலம்பட்டி காவல் ஆய்வாளரிடம் காலை சுமார் 10.55 மணியளவில் வேண்டுகோள் கடிதம்பெற்று, உசிலம்பட்டி மருத்துவ அலுவலரிடம் காலை சுமார் 11.45 மணிக்கு சமர்ப்பித்து, பிரேத பரிசோதனைக்காக பிரேதத்தின் அங்க மச்ச அடையாளங்களை காண்பித்தேன். PM No.121/2018 ன் படி பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தினை பெற்று அதன் உறவினர்களிடம் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். பின்பு, நீதிமன்ற உத்தரவின்பேரில் இவ்வழக்கின் சொத்துக்களை 16.10.2018 அன்று

MDU/BIO.No.235/2018 ன்பேரில் மதுரை மாவட்ட வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து பின்பு காவல்நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

இவ்வழக்கில் இறந்து போன அறிவழகனை இவ்வழக்கிற்கு முன்பு எனக்குத் தெரியாதென்றால் சரிதான். இறந்துபோனவரை யார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்ற விபரத்தை நான் ஆய்வாளர் விசாரணையிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். தடய சொத்துக்கள் என்னென்ன என்பதை நான் துல்லியமாக சொல்லி சாட்சியமளிக்கவில்லை என்றால், அவைகள் ஒரு பெட்டியில் போடப்பட்டு சீல் வைத்து என்னிடம் கொடுக்கப்பட்டது. அவ்வாறான தடய சொத்துக்கள் மருத்துவர் எடுத்துக் கொடுத்த சொத்துக்களா என்றால் இறந்துபோன அறிவழகனின் பேண்ட் மற்றும் சட்டை மட்டும் எனக்குத் தெரியும், மற்றவை தெரியாது. இவ்வழக்கில் PM சென்றதற்கான கடவுச்சீட்டினை ஆய்வாளர் வழங்கினார், பகுப்பாய்விற்கு பொருட்களை அனுப்புவதற்கான கடவுச்சீட்டினையும் ஆய்வாளர் வழங்கினார், எனது பணி முடித்து இரண்டு கடவுச்சீட்டுக்களையும் நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன் என்றால்

சரிதான். மேற்படியான கடவுச்சீட்டுகளின் அடிப்படையில்மட்டும் நான் பணியில் இருந்ததாக உறுதி செய்ய முடியும் என்று சொன்னால் சரிதான்.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம்- ரமேஷ்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.